# இந்த நாள் இனிய நாள்

சிந்தனைச் சிதறல்கள்



யாழ் தமிழ்மகள்

மணிமேகலை கைலைவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த நாள்
# இனிய நாள்

யாழ் தமிழ்மகள்
மணிமேகலை தைலைவாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைத் தொகுப்பு : இந்த நாள் இனிய நாள்

கவிஞர் : மணிமேகலை கைலைவாசன்

தொடர்பு

விலாசம் : கனடா

தொலைபேசி : 6479893640

email : Mehala.flower@Gmail.com

பதிப்புரிமை : விதுர்சன் மகாராஜா

முதற்பதிப்பு : 2015.05.02

அச்சுப் பதிப்பு : மதிகலர்ஸ், முத்திரைச்சந்தி. 0212229285

பக்கம் : x+54

ISBN இலக்கம் : 978-955-42251-1-4

விலை : 200/=



நூலகத்திலிருந்து நீக்கப்பட்டது

கொழும்புத் தமிழ் சங்கம்

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு

திரு/ திருமதி/ செல்வி

க. குமரன்

அவர்களால் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது

திகதி 19/12/2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



வேரிழந்த ஆலமரமாய்த் தவித்த வேளை

முதல் விழுதாய்த் தாங்கி,

தன் அழகிய கனவுகளை கரும் போர்வைதனில் மூடி

அன்னையாகித் தந்தையாகி

எமக்காக வாழும் நம்பிக்கை ஒளியாம்

என் அன்புச் சகோதரி

**கங்கைவேணி கைலைவாசன்**

அவர்களுக்கு

இந்நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு முத்தங்களுடன் ...

தூங்கா என் நினைவுகளைத்
தூண்டா மணிவிளக்காக்கி
தங்களுக்கான அன்பினை
தாயகக் குழந்தைகளுடனும்
பகிர வைத்து
எழுது அம்மா எழுது என்று
என்னை வாழ்த்திக் கொண்டிருக்கும்
என் அன்புச் செல்வங்கள் ...
வின்சியா, விதுர்சன், கார்த்திகா ...
உங்களுக்காக
அம்மா நனைகிறேன்
ஆனந்த மழையில்,
எனக்கான வாழ்த்துக்கள் அனைத்தும்
உங்களுக்குமே.

யாழ் தமிழ் மகள்

மணிமேகலை - கைலைவாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் நிறையவே சொல்லலாம்! சகோதரியைச் சகோதரன் பாராட்டுவது என்பதை இந்த உலகம் ஏற்காது. இவரது படைப்புகளை ஓர் சராசரி வாசகனாக படித்ததால் எழுந்த சிந்தனையே மேற்சொன்னவை எல்லாம்.

மணிமேகலை ஓர் பெரிய ஆலமரம். அது தழைத் தோங்கி செழிப்போடு இருந்தால் தான் கவிக்குயில்கள் அதில் கூடுகட்டி மகிழும் முனிபுங்கவர் முதல் என் மாதிரியான வழிப்போக்கர்கள் வரை அதனடி யில் இளைப்பாற முடியும்.

மணிமேகலைக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து மகிழ்கிறேன். அவரது தமிழுக்கான சீரிய தொண்டை நினைத்து உள்ளம் பூரிக்கிறேன்.

அவர் வாழ்க!
அவர் சிந்தையிலும் எழுத்திலும் வாழும் தமிழ் ஓங்குக!

அன்பன்
இரா.சங்கரநாராயணன்
146 செட்டித்தெரு
புதுச்சேரி 605001
இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வயலைவ்யூர் மண்ணிலே

பாரம்பரியக் கலை மரபில் பிறந்த
என் அன்புத் தங்கையின்
முதற் பிரசவம்
"இந்த நாள் இனிய நாள்"

வண்ண மலர்களைக் கொண்ட

மாலை தொடுப்பது போல உள்ளது
உனது இனிய கவிநயங்கள் தொடரட்டும்
உன் சிந்தனைகள் வானளவு உயரட்டும்

சிறுவயது முதலே நீ
தமிழ் மீது, கொண்ட காதலை நானறிவேன்.
புலம் பெயர்ந்து இருந்தாலும் உனது எண்ணம்,
எழுத்து எல்லாமே
நம் மண்மீது தானே.

நீ எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும்
நல்ல படியாக நடக்க வேண்டுமென்று
அன்புடன் மனமார வாழ்த்துகிறேன்.

**கங்கைவேணி கைலைவாசன்**
**அன்புச் சகோதரி**
Bollywood Couture
France
15.04.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயப்புரை

தெளிந்த நடை! தெள்ளிய சிந்தனை!! சமூகத்தைப் புடம் போடும் கருத்துக்கள். எல்லோரும் இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் கூறவந்த கருத்துக்கள் மெருகூட்டப்படுகின்றன.

"இந்த நாள் இனிய நாள்" தலைப்பு மலைப்பைத் தருகிறது.

மனிதனாகப் பிறந்தவன், ஒவ்வொரு நாளும் புலர்கின்ற பொழுது இனிய பொழுதாக அமைய வேண்டும் என இறைவனை இறைஞ்சுவது வழக்கம்.

தினந்தினம் பொழுது நன்றாக அமைந்தால் அதைவிட சந்தோஷம் வேறெதுவுமில்லை. அந்த வகையிலே "இந்த நாள் இனிய நாள்" ஊடாகக் கூறப்படும் கருத்துக்கள் உயிர்த் துடிப்புள்ளவையாக அமைந்துள்ளன.

"அன்னையுமின்றித் தந்தையுமின்றி
வாழும் குழந்தைகளை
எண்ணிப் பாருங்கள்
கண்களிலிருந்து வடிவது கண்ணீரல்ல
செங்குருதி தான்"

"பொன்னைக் கொடுக்க வேண்டாம்
பொருளைக் கொடுக்க வேண்டாம்
உணவைக் கூடக் கொடுக்க வேண்டாம்
நானிருக்கிறேன் உங்களுக்காக
என்று சொல்லிப் பாருங்கள் ...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இன்றைய யதார்த்தத்தை எடுத்துக் காட்டும் அற்புதமான, ஆழமான, உணர்வு பூர்வமான வரிகள். நெஞ்சைத் தொடுகின்ற கவிகள்.

இன்றைய காலகட்டத்தில் எமது நல்ல எண்ணங்கள், சிந்தனைகள் மூலமாக எம்மையும் பிறரையும் வழிநடாத்த வேண்டும் என்பதற்கிணங்க ஒவ்வொரு சிந்தனையம் புடம் போடப்பட்டுள்ளது.

எமது சிறிய தந்தையாரும், நாடகக் கலைஞருமான திரு.வீ.எம்.குகராஜா அவர்களின் அரவணைப்பும், வழிகாட்டலும் எங்கள் கலை, இலக்கிய பயணத்திற்கு வித்திட்டது.

இதன் பேறாய் என் அன்புச் சகோதரி மேகலாவின் "இந்த நாள் இனிய நாள்" வெளிவருகின்றது.

தங்கையின் எழுதுகோல் வாழ்வின் அர்த்தங்களைக் கூறும் திறவு கோலாக அமையட்டும். தமிழ்ப்பற்றும், தாய்மண் பற்றும் கொண்ட இவர் இலக்கியப் பயணத்தில் அகலக் கால்பதித்து விண்மீனாய், வான்சுடராய் ஒளிவீச உளம் நிறைந்த வாழ்த்துக்கள். தெள்ளிய சிந்தனைகள் சமூகத்தின் பொக்கிஷமாகட்டும்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ப்பணி

பிரியமுடன்
திருமதி.கிருஷ்ணவேணி சிங்கராஜன்
(ஆசிரியை,)
யா/வயாவிளான் மத்திய கல்லூரி
வயாவிளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியப்புரை

அன்புச் சகோதரியாம்
யாழ் தமிழ்மகள் மணிமேகலையின்
எழுத்துப் பயணத்தில்
இனிய திருப்பு முனை இது!

இலகுவில் புலனுணரும் மொழிநடையில்
கண்டு கடந்த அனுபவங்களினூடே
நாளையைச் செப்பனிடும்
நல்வழிகாட்டி "இந்தநாள் இனியநாள்"

காற்றுக்கு வேலி
கடலுக்கு அணைக்கட்டு
யார்க்கும் அடங்கா மனக்குதிரைக்கு
மந்திரக் கடிவாளம்!

புண்பட்ட மனங்களுக்கு
புதியதொரு அருமருந்து
வழியேதும் இல்லையென
வாழ்க்கையை வெறுத்தோரையும்
வரலாறு படைக்க வைக்கும்
தன்னம்பிக்கைச் சூரியன்!

இந்நூல் திறக்கும் போது
புரட்டுகின்ற பக்கங்களில் இருந்து
வாசக நெஞ்சங்களில்
வந்து சேரட்டும்
புதிய ஒளிக் கீற்றுக்கள்!
சாதனைப் பெண்ணாம் - என்
சகோதரிக்கு வாழ்த்துக்கள்

**தமிழ் கலந்து தூக்கி வளர்த்த தம்பி**
**வயவையூர் கை.சீதாராமன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

நானே பாடமாகி...
விடைகாணா வினாக்களுக்கு விடையாகிறேன்
பூக்களை மட்டும் நேசித்தவள்
புன்னகை மட்டும் சுவாசித்தவள்
வாசிக்கிறேன்.
புதிய அத்தியாயம்
“இந்த நாள் இனிய நாள்” என்று
என்னையே புத்தகமாக்கி!

யோசிக்க என்று எதுவுமில்லை...
யோசனைகள் கூட
என்னை மறந்து விட்டனவாம்
யோசிக்கச் சொல்லி
யாசிக்கின்றன...
நானோ...
வாசிக்க மட்டுமே
தயார் என்கிறேன்.

என்னை விதியாக்கி
நான் எழுதும் சரிதங்கள்
நாளை புதுவரலாறு சொல்லட்டும்
வார்த்தைகளில் வலிமை தந்தான் பாரதி
கரம் பிடித்து வழிநடத்துகிறாள் கலைவாணி

நான் ஔவையானாலும்
குழந்தையானாலும்
நீந்துவதென்னவோ
தமிழ் நதியில் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கரை விளக்கம் யார்?
என்ற கேள்விக்கு விடை
நீங்கள் தான்
வாசகர்களே.

முகநூல் சொந்தங்கள் ஆயிரம் பேர் என்றிருந்தாலும் எனக்கு முகவரி கொடுத்த சொந்தங்களை நினைவு கூர்கிறேன். அவர்களை வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன்.

சிந்தனைகள் தெளிவானால்
சேர்வதெல்லாம் நன்மைகளே.
எழுதும் கை எனது
எழுதச் சொல்கிறாள் கலைவாணி.
எழுதும் மை தீர்ந்தாலும்
என் குருதி தானே நிரப்பும்
என் எழுதுகோலை.

மனக்குமுறல்களோடு சிலர் சொன்ன கவலைகளுக்கு தீர்வாக என் வரிகள் இருந்திருக்கின்றன.

தற்கொலைகளை விரும்பிய மனங்கள் மாற்றம் பெற்று மகிழ்வோடு வாழ்கின்றன. வார்த்தைகள் தந்த நம்பிக்கையால் நலமுடன் வாழ்கிறோம் என்று உலகின் பல மூலைகளில் இருந்தும் வாழ்த்துச் செய்திகளும் ஆசிகளும் என்னில் அன்பு காட்டும் போது நெகிழ்கிறேன்.

வரிகளால் மருத்துவம் செய்கிறேன் என்று சொல்லி பலர் அழுததுண்டு சொல்லவும் சொல்லமுடியாமலும் இருந்த பல சோகங்களும் தீர்வுகள் தந்தன வரிகள் என்று அன்புடன் சொன்னவைகளும் என்னை நினைத்து நானே பெருமைப்பட வைக்கும் காரணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும், நட்பும் எங்குள்ளதோ...
அங்கு தான் ஆறுதலும்
அந்தவகையில் மணிமேகலை பலருக்குத் தோழி
அதனால் மகிழ்ச்சி

வாழ்வின் இனிமைகள் ஏராளம்
அதை உணரத் தவறும் பட்சத்தில் மிஞ்சுவது
வேதனையே.
"சாதனைகள் செய்" என்று
காலம் நமக்காகக் காத்திருக்கின்ற போது
வேதனைகள் எதற்கு?
துயர் கடந்த உலகம்
கண்முன்னே.
தொடருங்கள் தேடல்களை
சிறு துரும்பும் உங்களைக் கரையேற்றும்
ஒரு எழுதுகோலும் தாளும் கூட
உங்களை உருமாற்றும் உயர்வாக்கும்
நட்பாகும்.

பெண்ணுக்கும், மண்ணுக்கும், கண்ணுக்கும் வரும்
சோதனைகள் அதிகம்.
சாதனைகள் தேடலானால்
வெற்றிகளே பாடலாகும்
பாடுங்கள் உங்கள் எண்ணங்களை
ராகமாக்கி, வீணையாக்கி!
புதிய இசை, புதிய வடிவம், புதிய உலகம்
உங்கள் கைகளில் வாழ்த்துக்கள்.

அன்புடன்
யாழ் தமிழ் மகள்
மணிமேகலை கைலைவாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அன்பு கொண்டு ...

இந்த நாள் இனிய நாள் ஆகட்டும். உயிர்களை எல்லாம் தன் குழந்தைகள் என்றே எண்ணி தாயுமானவன் ஆனான் கடவுள். சுமைகளைத் தன்னால் சுமக்க முடியவில்லையே என்று தாயைப் படைத்தான். தான் தப்பிக் கொண்டான். தாயின் பராமரிப்பிலே தான் குழந்தைகள் கவலைகள் மறந்து வளர்க்கின்றன.

அன்னையுமின்றித் தந்தையுமின்றி வாழும் குழந்தைகளை எண்ணிப் பாருங்கள். கண்களில் இருந்து வடிவது கண்ணீரல்ல. செங்குருதி தான்.

யார் அடித்தாலும் அம்மா என்று அழத் தெரிந்த குழந்தைகள் அம்மா இல்லாதவிடத்து யாரை அழைக்கும்? கண்ணீர்த் துளிகள் தான் பதில்கள். அனாதைகள் என்ற சொல் உலகில் இருந்தே ... ஏன் ... அகராதியில் இருந்தே அகற்றப்பட வேண்டும் என்பேன் நான். நாம் உயிரோடு இருக்கும் போது அனாதை என்ற சொல் உருவாகலாமா?

பெற்றவர்களை இழந்த பிள்ளைகளின் கண்களில் வெறுமையும், சோகமும், ஏக்கமும் நிறைந்திருக்கும். நான் பார்த்திருக்கிறேன்.

பொன்னைக் கொடுக்க வேண்டாம், பொருளைக் கொடுக்க வேண்டாம். உணவைக் கூடக் கொடுக்க வேண்டாம். நான் இருக்கி றேன் உங்களுக்காக என்ற சொல்லிப் பாருங்கள். உலகம் உங்கள் பின்னால் வரும்.

சிறிதளவு ஆனாலும் புன்னகை கலந்து அன்பைக் கொடுங்கள். அவர்கள் முகங்களிலும் கோடி சூரியர்கள் ஒளி வீசுவார்கள். இருக்கும் அன்பில் ஒரு துளியைக் கொடுத்துத் தான் பார்ப்போமே....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அனுபவங்கள்

வாழ்க்கை மிகப் பெரிய புத்தகம் அதை எழுதி முடிக்க மனிதன் தன் அனுபவத்தைக் தான் தேடுகிறான். துன்பங்களும், இன்பங்களும், கடந்து வந்த பாதைகளும், கற்றுக் கொண்ட பாடங்களும், தோல்வி களும், வெற்றிகளும், சுமைகளும், சுகங்களும் வாழ்க்கையின் பல அத்தியாயங்கள் தான்.

பலருக்கு வாழ்க்கை இனிமையான பக்கங்கள் தான். சிலருக்கு அது கிழித்தெறியப்பட வேணடிய பக்கங்கள். அனுபவங்கள் சில நேரங்களில் நல்ல நண்பர்கள் போலத்தான். நன்மைகள் செய்யும் போது தட்டிக்கொடுப்பதும் தவறுகள் செய்யும் போது சுட்டிக் காட்டுவதுமாக கை கொடுக்கின்றன.

முக்கியமான அனுபவங்களைக் குறித்து வைத்துக் கொள்ளுங் கள். நாளடைவில் நீங்கள் மறந்து போனாலும் அவை உங்களுக்கு ஞாபகப்படுத்தலாம் அல்லவா? அனுபவங்கள் உங்களை வளம்படுத் தட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. புன்னகை முகம்

விடிகின்ற பொழுதுகள் மகிழ்ச்சியுடன் விடியட்டும். முகம் மலர் போன்றது. புன்னகை சிந்தும் போது மலர்கிறது. கவலைகள் சுமக்கும் போது வாடுகின்றது. வாழ்க்கை ஒரு முறை தான். வாழ்ந்து பார்க்கச் சொல்லித்தான் அனுப்பினான் இறைவனும் நாம் தான் அதனை மறந்து கவலையின் சுவடுகளை முகத்தில் சுமக்கின்றோம்.

மனம் விட்டுச் சிரிக்கப் பழகுங்கள். உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. படைத்தவன் மேல் குறைகள் சொல்வதை நிறுத்துங்கள்.

பாதை வகுத்தவன் இறைவன். பயணம்
செய்பவன் மனிதனல்லவா?
புன்னகை மலர்கள் ஆவோமா?
பூஞ்சோலைகள் ஆக்குவோமா?

லட்சியங்கள் உயர்வானால் கவலைகள் தூசு தான். துடைத்து எறியுங்கள் கவலைகளை புதிய உலகம் உங்கள் முன்னே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வாழ்வெனும் அத்தியாயம்

வாழ்க்கைப் புத்தகத்தில் பல அத்தியாயங்கள் உயிர் எனும் மை கொண்டு எழுதப்படுகின்றன. ஒவ்வொரு அத்தியாயங்களும் பல அனுபவங்கள் தந்து நிற்கின்றன.

அனுபவங்கள் சிலவேளைகளில் ஆசானாகவும், மாணவனாகவும் உருவம் பெறுகின்றன.

அழுகின்ற பக்கங்களை சிரிக்கின்ற பக்கங்கள் தம்முடன் அழைத்துச் செல்கின்றன. நினைவுப் பக்கங்களும், மறதிப் பக்கங்களும் வாழ்க்கையைப் பரபரப்பாக்குகின்றன. நட்புப் பக்கங்கள் வாழ்க்கையை மெருகூட்ட உயிர்களின் ஒவ்வொரு பருவங்களும் உணர்ந்தே எழுதப் படுகின்றன. காதல் பக்கங்கள் இனிமைப்படுத்த, அறிவுப் பக்கங்களும் அழகுப் பக்கங்களும் சேர்ந்து வாழ்க்கையை முழுமைப்படுத்துகின்றன.

வாழ்க்கை ஒரு இனியவரம் என்று தான் வாழ்வுப் புத்தகத்தை எழுதினான் இறைவன். அதை மறுபடி வாசித்து அவனே மகிழ்ந்து போனான் அவன் மகிழ்ச்சியை மனிதர்களும் கொஞ்சம் பகிர்ந்து கொள்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. உன்னிடமே இறைவன் ...

இறைவன் இருப்பது வானத்திலே என்றும், இறந்தவர்களின் ஆன்மா உலாவுவது வானத்திலே என்றும் பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம்.

அது உண்மையல்ல ....

இறைசக்தி எங்கும் உள்ள நிறைசக்தி, சகல உயிர்களிடத்தும், மனங்களிடத்தும் அது குடி கொள்ளும்.

ஆன்மா அழிவற்றது. அது பிறந்து இறந்து பிறக்கிறது என்பர். புதுவடிவம் ஒவ்வொரு உடல்களுக்கூடாகவும் தான் எடுக்கிறதே தவிர அழிவதில்லை.

இறைவனை வெளியே எங்கும் தேடாதீர்கள். உங்கள் மனதுக் குள்ளேயே ஒளித்து வைத்துக் கொண்டு வினாக்களை உங்களிடமே கேளுங்கள். விடைகளும் அங்கிருந்தே கிடைக்கப்பெறும்.

பொய்யான உடலை மெய் என நம்பும் சில மனிதர்கள் மெய்யான இறைவனை நம்புவதில்லை. துன்பம் நேர்கையில் இறைநாமம் மட்டுமே விடுதலை தரும். நம்புங்கள்.

வாழ்க்கை ஒரு அழகிய பயணம் ரசிக்க வேண்டியவற்றை ரசித்துக் கொண்டும், மறக்க வேண்டியவைகளை மறந்து விட்டும், விடை பெறும் நேரம் வரும் போது மகிழ்வுடன் விடை பெறவும் வேண்டும்.

ஆன்மா சுமக்கும் துன்பச்சுமையைக் குறைக்கும் வழியை ஆண்டவன் மட்டுமே எமக்குத் தருவான்.

நம்பிக்கை எம்மை வழிநடத்தும். நம்புங்கள். எந்த நாளும் பொன்னான நாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. இயல்பான அழகு

இயற்கை இயல்பாக இருக்கும் போது தான் அழகு. அது தன் இயல்பை மறந்தால் அழிவு. மனமும் அப்படியே.

மனதை அதன் இயல்பான நிலையிலேயே இருக்க விடுங்கள் எந்த விருப்பங்களையும், வெறுப்புகளையும் திணிக்காதீர்கள்.

தானாக மனம் எதனை விரும்பி ஏற்றுக் கொள்கிறதோ அதுவே நிலைக்கும்.

உணவு, உடை, உறக்கம், மகிழ்ச்சி, வாழ்க்கை, வேலை என்று மனதுக்கு விருப்பமான விடயங்களைத் தெரிவுசெய்யும் உரிமையை மனதிடமே விட்டுவிடுங்கள்.

நீங்கள் நீங்களாக இருக்கும் வரையில் தோல்விகள் இல்லை.

"என்னால் முடியாதே" என்று தூரமாவதைத் தவிர்த்து முயன்று பாருங்கள்.

"முயற்சி திருவினையாக்கும்"

மனம் பல வெற்றிகளைக் கைப்பற்றும் அதிசய ஆயுதம். அது வார்த்தைகளை வசப்படுத்தி நிலையான வெற்றிகளையும் புகழையும் அடைகின்றது.

முடிந்தவரை பேசுங்கள் உங்கள் மனதோடு ஏனெனில் மனதினை ஆளும் மன்னர்கள் நீங்களே தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. வண்ணக்கோலம் நீயாகு ...

வினாடிகள் நிமிடங்களை மகிழ்விக்க, நிமிடங்கள் மணித்துளிகளைச் சந்திக்க, நாட்களும், வாரங்களும், மாதங்களும், வருடங்களும் மனிதனுக்கு வாழ்த்துச் சொல்லி "காலம்" என்ற பரிசினைக் கையளிக்கின்றன.

காலம் கையில் கிடைத்தாலும் அதன் கோலத்தை அழகுபடுத்த வேண்டியவன் மனிதன் தானே?

வைக்கும் புள்ளிகள் வெற்றிப் புள்ளிகளாகும் போது கோலமும் போற்றப்படுகின்றது. அதை வரைந்தவனும் போற்றப்படுகின்றான்.

வாழ்க்கையும் அழகிய கோலம் போலத்தான் எண்ணங்களை அழகான புள்ளிகளாக்கி, வண்ணங்களாக்கி புதிய வடிவங்களை உருவாக்கிப் பாருங்கள். நீங்களே அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கோலம் அழகாகி இருக்கும். நீங்களும் தான். அழகான புன்னகை சுமந்த நாட்கள் உங்கள் அனைவரோடும் தொடர்ந்து வருவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. விதியை வெல்லும் மதியைப் பாரு

விதியை எண்ணி அழுபவர் பலர் மகிழ்பவர் சிலரே.

விதியும், மதியும் இறைவன் படைத்தான் திறமையுள்ளவன் மதியின் துணை கொண்டு விதியை வெல்வான். மற்றவன் விதியை நொந்து அழுவான்.

தொடக்கம் என்ற ஒன்று இருந்தால் முடிவு என்ற ஒன்றும் இருக்கும் என்று நம்புங்கள்.

பிறப்பும், இறப்பும், இன்பமும், துன்பமும், சிரிப்பும், அழுகையும் மாறி மாறி வருவது போலே தான் விதியின் செயல்களும்

இறப்பைக் கண்ட மனிதன் பிறப்பைப் பற்றி சிந்திப்பதும், துன்பம் உணர்ந்த மனிதன் இன்பத்திற்கான வழிகளை ஆராய்வதும் அழுகின்ற மனிதன் சிரிப்பதற்கு முயல்வதும் விதி தந்த படிப்பினையே.

இருள் விலகி ஒளி கிடைக்கும் என்ற நம்பிக்கை மதியே தந்து மதிப்புப் பெறுகிறது.

விதி எழுதிய இருளான நாட்கள் கூட நம்பிக்கை என்ற தீபத்தால் ஒளி பெறலாம்.

விதி தயங்கி நின்றாலும் மதி முந்திக் கொண்டு பயணம் செய்யும் "நன்மைகள்" என்ற பாதை நோக்கி, வெற்றி என்றும் நமதே ஆகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. **தொல்லையிலும் பிறவி ...**

காலையில் எழுந்ததுமே மனிதன் கடவுளை வேண்டுகிறான் ...

"இறைவா மற்றவர்களால் எனக்கு எந்தத் துன்பங்களும் வரக் கூடாது" என்று

தன்னால் மற்றவர்களுக்குத் துன்பம் வரக் கூடாதென நினைப்பவர்கள் மிகச் சிலரே. வேண்டிக் கொள்ளுங்கள்.

"என்னால் தொல்லைகள் மற்றவர்களுக்கு வேண்டாம்" என்றே.

சூழும் துன்பங்கள் எல்லாம் எம்மை விட்டு விலக இறைவனை மனதிலே குடியிருத்துங்கள்.

இறைசக்தி ஒன்றே மனதுக்கு நிறைவு தருவது. ஒளி தருவது.

மனம் தடுமாறும் வேளைகளில் மனச்சாட்சி பேசுகிறது. இறை சக்தியே மனோசக்தியை வழிநடத்துகின்றது.

மனம் போன போக்கில் செல்ல இறைவன் அனுமதி தருவதில்லை.

இறைவனை முதன்மைப்படுத்தி கடமைகளை ஆரம்பியுங்கள்.

நீங்கள் ஆச்சரியப்படும் வகையில் நன்மைகள் உங்களை வந்தடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. எண்ணங்கள் மலரட்டும் ...

உயர்வும் தாழ்வும் மனித வாழ்வின் இயல்பு நிலையில் ஏற்படும் மாற்றங்கள். ஒருவருடைய வீழ்ச்சியைக் கண்டு ஒரு போதும் மகிழாதிருங்கள். ஏனெனில் வீசி எறியப்படும் சிறுகல் கூட ஒருநாள் மலையாக வளரலாம் ... உயரலாம், சிலையாகலாம்.

மனங்களை மலர்களாகவோ அல்லது கோவில்களாகவோ வைத்திருக்க முடியாது போனாலும் சுத்தப்படுத்தப்பட்ட கட்டிடமாக என்றாலும் வைத்திருக்கலாமே?

நல்ல எண்ணங்கள் என்றுமே உயர்வு தருபவை. வினாடிகள் போனால் திரும்பி வர முடியாதவை.

இந்த வினாடியில் இருந்தே நன்மைகளை எண்ண ஆரம்பியுங்கள்.

நன்மைகளின் தோட்டமும், விளைச்சலும் நீங்களே ஆவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. இயல்பும் இலகு

மனதை இயல்பு நிலையில் அமர்த்தி வைப்பது இயலாத காரியம் என்று பலர் சொல்வர். உண்மை தான். எண்ணங்கள் அலை அலையாக வந்து கதை பேசும் போது மனந்தான் என்ன செய்யும்?

பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியாது தவிக்கின்ற பொழுது களிலும், மனம் நிம்மதி இழக்கின்ற தருணங்களிலும், வார்த்தைகளால் நோகடிக்கப்படுகின்ற வேளையிலும்

*இதயம் படும் பாட்டை யாருமே*
*பொருட்படுத்துவதில்லை.*

ஒவ்வொரு சோகங்களும் இதயங்களுக்கு சுமைகள் தான் புரிந்து கொள்ளுங்கள்.

சுமைகள் கூட சுமப்பதற்கென்று அளவுகள் உண்டு. அளவுக்கு மிஞ்சிய சோகச் சுமைகள் ஒரு நாள் இதயத்தையே அமைதியாக்கி விடும்.

"ஆறடி மனிதன் .... ஆறறிவுள்ள மனிதன் ஒரு கைபிடியளவு இதயத்திற்குத் தரும் சோகம் மிக மிகப் பெரிது தான்."

சோகங்களைக் கொஞ்சம் தூரமாக்குங்கள். நல்ல நண்பர்கள் உங்களுடன் நட்பாகட்டும். அழகிய சோலையும், இனிய தென்றலும், மழலை மொழிகளும், இசையும், அலையோசையும், மழையும், ஓடும் மேகங்களும், காலை, மாலைச் சூரிய அழகும், உங்கள் இதயங்களை அப்படியே வாழ்த்துவதைப் பாருங்கள்.

மகிழ்ச்சிப் பூக்கள் உங்களை இதயங்களை எப்போதும் மகிழ்வாக்கட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. மாற்றம் மாறுமுன் நீ மாறு ...

நிமிடத்திற்கு நிமிடம், கணத்துக்குக் கணம், யுகத்துக்கு யுகம் என்று காலம் மாறிக் கொண்டே போகிறது. மாற்றங்கள் மட்டும் தாம் மாறுவதில்லை எனச் சத்தியம் செய்கின்றன. நேற்றுப் போல் இன்று இல்லை. இன்று போல் நாளை இல்லை. நாளையும், அதற்கடுத்த நாளும் என்ன? என்ற கேள்விகள் தான் மிஞ்சுகின்றன. வாழ்க்கையும் இது போலத் தான்.

நேற்றும், நாளையும் வேறுவேறு. இன்றைய பொழுதுகள் மட்டுமே உங்களுடையவை, இனிமையானவை ... இளமையானவை.

இணைத்துக் கொள்ளுங்கள் இந்த வினாடிகளை உங்களுடன். மனதை மாற்றுங்கள் ஒரு குழந்தையாக, சோகங்கள் மறந்த ஒரு பூஞ்சோலையாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. புகழை நேசி ....

மனிதனாகப் பிறந்தவன் தன் வாழ்நாளில் வேண்டும் என்று ஆசைப்படுபவை வெற்றியும் புகழுமே. புகழ் என்ற ஒன்று வந்து சேரும் போதே வெற்றியும் சேர்ந்து கொள்கிறது. பிறந்தோம், உண்டோம், உறங்கினோம், இறந்தோம் என்ற வாழ்க்கை புகழுக்குரியதல்ல.

"வாழ்ந்தோம்" என்ற சொல்லே புகழுக்குரியது.

பசித்தவன் முகம் அறிந்து ஒருவேளை உணவு கொடுத்துப் பாருங்கள். அவன் வயிறும் மனமும் உங்களை வாழ்த்தும் போதே புகழும் சேர்கிறது. புகழுக்கு வேண்டியது பணமல்ல. மனம். அது இலவசமாகவே இறைவனால் தரப்பட்டது.

மனதில் உள்ள அன்பை, பண்பை, ஆசிகளை இலவசமாகவே கொடுத்துப் பாருங்கள்.

சிந்தனை, சொல், செயல் உயர்வாகி வடிவம் பெறும் போது புகழும், வெற்றியும் உங்கள் பெயருடன் தானாகவே வந்து சேர்ந்து கொள்ளும்.

ஆசைப்படுங்கள் ஓசைப்படாமல் அல்ல ... சத்தமிட்டு .... புகழும் கொஞ்சம் வேண்டு மென்று!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. தாய்மை போற்று ...

தாயெனும் மகா சக்தி தன்னலம் மறந்து தன் மக்களின் நல்வாழ்வுக்காக இறைவனை வேண்டி அன்புக்குரிய கடவுளாக வீட்டில் வசிக்கிறாள். இதை உணர்ந்து கொள்பவர்கள் தாயைப் போற்றுவர். உணராதவர்கள் உதாசீனப்படுத்தி விட்டு வேதனைப்படுவர்.

தாய்மை இறைவனே போற்றிப் பணிந்து நிற்கும் மிகப் பெரும் சக்தி.

மரணம் வென்று புதுஜென்மம் பெற்றே உயிர்களைப் பிரசவிக்கிறாள்.

பூமியின் பொறுமையையும் மிஞ்சும் குணம் தாய்மையிடம் மட்டுமே.

இன்றைய காலத்தில் தாய் என்பவள் பிள்ளைகளால் சரியான முறையில் போற்றப்படுகிறாளா? என்பது கேள்விக்குறியே. பல முதியோர் இல்லங்களில் அவள் காலப்பதிவாகிக் கிடக்கிறாளே? ஏன்? என்ற கேள்விக்கும் பதில்தர முடியாத பல பிள்ளைகளையே நாம் காண்கிறோம்.

தாயைப் போற்றுபவர் மட்டுமே சகல உயிர்களையும் நேசிப்பர். போற்றும் குணம் மறந்த பிள்ளைகள் இதை உணரும் நாள் எந்நாளோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. இறந்தபின்னும் வாழ்ந்துபார் ...

உறவுகள் சேர்வது அன்பினை வளர்த்து மகிழ்வாய் வாழவே. விஞ்ஞானம் வளர்ச்சி கண்ட உலகத்திலே கூட மகிழ்ச்சி தரும் உறவுகளைக் காண்பதே அரிதாகின்றது.

தம்மை மிஞ்சும் திறமை, தகுதி, யாரிடமும் இல்லை என்ற ஒருவிதமான போட்டி மனப்பான்மையும், ஏற்றத்தாழ்வுகளும், புரிந்துணர்வின்மையும் உறவுகளைக் கூறு போட்ட வண்ணமே தான் உள்ளன. சொற்கள் ஆறாத வடுக்களாய் மனங்களைப் புண்படுத்தும் போது அங்கு அன்பு வாழும் தகுதியை இழந்து போகிறது. மகிழ்ச்சி தூரமாகிறது. பெற்றவர்கள், கணவன், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் என்று ஆயிரம் பேர் வாழ்ந்தாலும் அன்பும், புரிந்துணர்வும் இல்லையெனில் எல்லாமே பூச்சியமே.

வாழ்க்கை எதுவரை?<br>
மகிழ்ச்சி இல்லாது வாழ முடியுமா?<br>
எனும் வினாக்களுக்கு விடையாக<br>
விதியின் முடிவை அறிந்தவர் எவருமில்லை<br>
மரணம் அழையா விருந்தாளி.<br>
வாழ்க்கையை வாழும் போதே<br>
வாழ்ந்து விடுவது நல்லது என்கிறேன்.

---

பிடிவாதங்கள், அவநம்பிக்கைகள், விரோதங்களைத் தூரம் வையுங்கள். மகிழ்ச்சி உங்களை நாடிவரும். வாழ்க்கை வாழ்வதற்கே. இன்னும் கொஞ்ச வாழ்க்கை மிச்சம் இருக்கிறதே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. சீர்வரிசை ....

மனம் பிழைக்கும் போது மணவாழ்க்கையும் பிழைக்கிறது. கிரகங்கள் என்ன செய்யும்? நகைப்பதைத் தவிர.

நகை சுமந்த பெண் தான் வேண்டுமென்றால் பலர் புன்னகை தொலைகிறதே. வாதங்கள் விதண்டாவாதங்கள் ஆனால் வாழ்க்கைச் செலவு வக்கீலுக்கு மட்டுமே. நோக்கங்கள் தெரிந்து மணம் புரிக. மனம் வெல்க.

சீர்வரிசைகள் அளவாக பெற்றோரால் மனமுவந்து வழங்கப்படுவதே சிறப்பு. சீ.... தனமே என்று மனம் வெறுத்துப் போகுமளவுக்குக் கேட்காதீர்கள். வாழ்க்கை வரமென்றே வாழவரும் பெண்ணினம் திருமண பந்தத்தால் வருந்த வேண்டாமே...கல்யாண ஊர்வலத்தில் பன்னீர் தான் தெளிக்கப்படவேண்டும்.

கண்ணீர் கலக்கப்பட வேண்டாமே.! புரிதலும், தெளிதலும் புதிய சமுதாயத்தைக் கட்டியெழுப்பப்பட்டுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. தேடல் ...

நாளாந்த வாழ்விலே தேடல்களும் தேவைகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. காலையில் இரைதேடிச் செல்லும் பறவை போல மனிதனும் வேலை நாடிச் செல்கிறான். வேலை முடித்துக் களைப்போடே வருகிறான் மறுநாளும் காலையில் வேலை செல்லல் கடமையாகிவிட துன்பச் சுமை தாங்காது வாழ்வின் மீது வெறுப்படைகிறான்.

தேவைகளும் தீர்ந்தபாடில்லை. மேலும் மேலும் மனம் சோர்ந்து போகிறான் மனம் விட்டுப் பேசுதல் மறக்கப்பட்ட ஒன்றாகி விடுகிறது. புலம் பெயர் நாடுகளில் இது அன்றாட நிகழ்வு.

ஒரு வீட்டில் வசிக்கும் உறவுகள் கூட ஒருவரை ஒருவர் உபசரிக்கவோ, நேரில் சந்திக்கவோ நேரம் இல்லாமலே போகிறது. உரையாடல்கள் குறைவடைகின்ற போது உணர்வுகளும் மௌன மாகின்றன. உறைந்து போகின்றன.

தனிமை சூழ்ந்து கொள்ள வாழ்வு சோதனையாகிறது. இங்கே தான் விழிப்புணர்வு என்ற ஒன்று அவசிய தேவையாகின்றது.

ஒருசில மணித்துளிகளாவது உரையாடுங்கள், உங்கள் அன்புக்குரியவர்களிடம் தேடல்கள் பெரிதானாலும் தேவைகளைக் கொஞ்சம் வரையறுத்துக் கொள்ளுங்கள். வாழும் காலங்கள் இனிமை சுமக்க வேண்டுமென இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்.

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட உறவுகள் கூட கவனிப்பாரற்று புழுதியில் புதைந்து போகின்றன.

வாழ்க்கையைச் சொர்க்கமும், நரகமும் ஆக்கும் திறன் உங்களிடமே தான் உள்ளது. நல்லனவற்றைத் தொடருங்கள். அல்லன வற்றைத் தவிருங்கள். உங்களை நீங்களே தேடுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. உயிர்களுக்காக உலகமா?...
## உலகத்துக்காக உயிர்களா? ...

தேடுகின்ற வினாக்களுக்கு விடைகள் தொடர்கதையாகவே தொடர்கின்றன. "உயிர்களுக்காக உலகம் என்றால் இன்னும் கண்ணீர் சுமந்த தேசங்கள் எதற்கு?"

உலகத்திற்காக உயிர்கள் என்றால் இன்னமும் சத்தமிட்டும் மௌனமாகவும் அழுகின்ற உயிர்கள் எதற்கு?... வினாக்களும் விடைகளும் தேடிப் பார்க்கிறேன். இரண்டுமே மனிதனுக்குள்ளும், மனதுக்குள்ளும் தான் இருக்கின்றன.

தேசங்களின் கண்ணீர்கூட மனிதர்களாலேயே உருவாகின்றன. நேசம் என்ற சொல் தேசத்தின் மீது வைக்கும் மனங்கள் மிகமிக அருகிப் போவதனாலும், சுயநலம் எனும் சொல் பலம் பெறுவதனாலும் இவை நிகழ்கின்றன.

மனிதனின் கண்ணீர் பாசத்தின் பலமும், பலவீனமுமே! ஒரே வீட்டிலேயே ஒரு சிலர் கண்ணீருடனும் ஒரு சிலர் மகிழ்வுட னும் வாழும் நிலை காண்கிறோம்.

அன்பு மறக்கப்படுதலும், அகம்பாவம் மதிக்கப்படுதலும், "நான்... நான் ..." எனும் ஆணவத்தினால் உறவுகள் பிளவுபடுதலும் மாற்றமுடியாத மாற்றமாகிறது. மனங்கள் குறுகிப்போக உலகம் பெரிதாக சோதனைகள் சோதிக்கத் தொடங்குகின்றன. "சாதனைகளுக்கு இங்கே எங்கே வழி?"....

உலகைவிடப் பெரிய சக்தி மனதிடமே உள்ளது. அது ஆக்கும், அழிக்கும் சக்தி கொண்டது. ஆக்கத்தின் மீது பற்று வைக்கும் போது அழுகைகளும் மறைந்து போகின்றன.

தேசமும், நேசமும், பாசமும் மனதில் நிறைந்திருக்கட்டும்.

வாழ்க வளமுடன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. உனக்காகச் சில கணங்கள்!

இயல்பாக இருப்பது சிரமமான காரியம்தான். எப்போதும், எதுவும் அடுத்தவர் நலனுக்காகவே என்று வாழும் போது சொந்த விருப்பங்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

உண்பதும், உடுப்பதும் பிறரின் விருப்பங்களுக்காக என்றால் சொந்த விருப்பங்களுக்கு இங்கே இடம் ஏது? கொஞ்சம் உங்களுக்காக வும் வாழப் பழகுங்கள்.

உங்களுக்குப் பிடித்த உடை, உணவு, இசை, அலங்காரம், விருப்பங்கள் என்று வரிசைப்படுத்திக் கொள்ளுங்கள். "மனம் ஒன்றும் பொதி சுமக்கும் கழுதையல்ல" தென்றல், வீணை, புல்லாங்குழல், இனிமையை மட்டும் அங்கு இசையாக்குங்கள்.

வாழ்க்கை நீண்ட பயணம். அளவுக்கு மீறிய சோகங்களும் சுமைகளும் கூட உங்களை இடறி விழ வைக்கலாம். சுவர் இருந்தால் தானே சித்திரமும்?

உங்கள் சிந்தனைகளில் உங்களையும் ஒரு கணம் நிறுத்தி வையுங்கள். உங்களுக்காகவும் வாழுங்கள். உங்களை நேசிக்கவும் எனப் பலரை உருவாக்குங்கள்.

நாம் இறக்கின்ற பொழுது நான்கு சொட்டுக் கண்ணீர்த் துளிகளாவது நம்மோடு பயணிக்குமானால் அதுகூட வாழ்வின் வெற்றி தான்.

இயல்பான குணங்கள் உங்களை உயரத்தில் வைக்கும். மாற்றங்களை நீங்களே உங்களுக்குள் உருவாக்குங்கள். வாழ்த்துக்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. மனமே ..... நீ நலமா?

மன அழுத்தங்கள் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது. சமுதாயம் என்னவோ வளர்கிறது. முன்னேறுகிறது என்று தான் சொல்கிறார்கள் ஆனாலும் மனங்கள்...?

கவலைகள் மனதின் வேரில் இருந்து ஆரம்பித்து கிளை பரப்பும் மரம் போல் வளர்ந்து கொண்டே தானிருக்கிறது. மாற்று வழிகள் இன்றி மனிதன் தவிக்கின்றான். ஆறுதல் கிடைக்காத போது மன அழுத்தங் களுக்கு உள்ளாகின்றான்.

மனதையும், உணர்வுகளையம், இயற்கையையும் மட்டுமே இறைவன் படைத்தான். அதனைப் பாதுகாக்கும் கடமையை மனிதனி டமே விட்டு விட்டான்.

மனிதனோ சிலவேளைகளில் மனம் என்ற ஒன்று இருப்பதையே மறந்து விடுகிறான். தனக்கு வரும் சோதனைகளைத் தாங்க முடியாது தவிக்கின்றான்.

பிரச்சனைகள் எங்கிருந்து வருகிறதெனக் கண்டறிந்தால் தீர்வுகளும் அங்கே தான்.

வாழ்க்கையை விடப் பெரிய கொடை எதுவும் இல்லை. வாழ்ந்து பாருங்கள் மகிழ்ச்சியுடன். மன அழுத்தம் இருந்த இடம் தெரியாமலே ஓடிவிடும்.

நல்ல உறவுகளும், நல்ல நண்பர்களும் உங்களுக்கு இருந்தால் மன அழுத்தங்கள் வருவதற்கு வாய்ப்பே இல்லை. மனங்கள் நலமாக என்றும் வாழட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. நிஜமாக வாழ்ந்திடுக ....

நினைவுகளுக்காகச் சில கணங்கள் நிஜமாக வாழ்ந்து பாருங்கள்; வாழ்க்கையும் காலமும் யுகம் யுகமாக வாழ்த்தி நிற்கும். தாயின் கருவறையும், தந்தையின் தோள்களும், துயரத்தில் தோள் கொடுத்த நட்பும் மனிதன் தன் ஆயுள்வரை உயரத்தில் வைத்துக் கொண்டாடும் மகத்தான் விடயங்கள்... நினைவுகள்.

மனிதன் உலகில் வாழ்கின்ற காலம் நிஜம். மரணத்தின் பின்னரும் சந்ததி சந்ததியாக அவன் புகழும் வாழும் என்பதில் ஐயமில்லை.

மனம் உயிரோடு பேசும் போது உணர்வுகளும் உயிர்பெற்று உயர்வடிவம் பெறுகின்றன.

எண்ணங்களில் எப்போதும் பொது நலமும் கலந்தே இருக் கட்டும். அது ஆபத்துக் காலங்களில் கூட உங்களைக் காப்பாற்றும் கவசமாகும்.

நிலையான, நிறைவான செல்வம் பணமோ ... பொருளோ அல்ல! மனம் தான்.

அன்பு வார்த்தைகள் வாழவைக்கும். கருணைப் பார்வை உயிர்ப்பிக்கும். ஆறுதலான கைகொடுப்பு அமைதிப்படுத்தும். மனமுவந்து ஆசி, ஆயுள் கொடுக்கும். நினைவுகளுக்காக நிஜமாகவே வாழ்ந்து பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. மனமும், மகிழ்வும்

மனங்கள் மகிழ்வுடன் வாழ வளமான சிந்தனைகளும், சொற்களும் வெளிவர வேண்டும்.

வார்த்தைகள் சிறியனவானாலும், பெரியனவானாலும் வரையறைகளுடன் வெளிவர வேண்டும்.

நோகடிக்கும் வார்த்தைகள் மனித அகராதியில் இடையில் செருகப்பட்டவையே. இவை மகிழ்ச்சிப் பூக்களைக் கருகவைப்பவை.

கருகும் சொற்கள் எதற்கு? உருக வைக்கும் சொற்கள் இருக்கும் போது?

இனிதான சொற்களை நாமாக உருவாக்கிக் கொள்ளலாமே....?

இடம், பொருள், காலம் அறிந்து வார்த்தைகளை உதிர்ப்பது நன்று.

இறைவன் மனிதனைப் படைக்கும் போது பரிசுத்தமாக தனது மனம் போலவே மனிதனுக்கும் வைத்தான்.

மனிதன் தான் தன்னைக் கடவுளிடம் இருந்து வேறுபடுத்திப் புனிதம் கெட்டுப் போகிறான்.

வார்த்தைகளுக்கான கடிவாளமும் எம்வசமே இருக்க வேண்டும். அப்போது வாழ்வும் வண்ணச் சோலையாகும். வார்த்தை வரம்பு மீறும் இடங்களில் மௌனம் அதை அடக்கும் ஆயுதமாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ## விதி எழுது

எண்ணங்கள் உயர்வானால் வெற்றிகள் வாசல்கள் தேடிவரும். நன்மையும் தீமையும் நம் மனதுக்குள்ளே தான் இருக்கின்றன.

நன்மைகள் கோவிலாகும் போது மனம் அங்கே தெய்வ மாகின்றது. எண்ணங்கள் தீபங்களாகின்றன. உங்கள் வாழ்க்கை ஒளியை நோக்கிய பயணமாகவே இருக்கட்டும்.

தீமைகள் கலந்த எண்ணங்கள் பயம் நிறைந்தும், கவலை நிறைந்தும் காணப்படும்.

மனிதன் மகிழ்வாய் வாழ்வதையே இறைவன் விரும்புவான்.

வாழும் காலம் சிறிதானாலும் காலம் போற்றும் கடமை செய்வோர் காலங் கடந்தும் நிலைபெறுவர். உலக வரலாற்றிலே தம்பெயர் எழுதிய படியே காலத்தைக் கையில் பிடித்து உங்கள் நண்பனாக்குங்கள். நேற்றும், இன்றும், நாளையும் என்பதில் "நேற்றும்", "நாளையும்" என்பவற்றைத் தூரமாக வைத்துவிட்டு இந்த நிமிடங்களைக் கைகளில் எடுத்துக் கொள்ளுங்கள். அது உங்களை எழுதிச் செல்லும் விதியாகும்.

எழுதுங்கள் உங்களை நீங்களே.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. சோகமே நீ போய்யாகு!

மனிதனின் மனதைத் தடுமாற வைப்பது சோகங்களே. சோகங்களுக்கு நீண்ட நாட்கள் வேண்டாம். துரத்தி விடுங்கள் அல்லது தூரமாகுங்கள். உடலுக்கும், உணர்வுகளுக்கும், உயிருக்கும் தொல்லை தரும் வியாதிகளாக இருப்பவை சோகங்களே.

சோகங்கள் இல்லாத மனிதரே இல்லை. ஆனாலும் அதன் எல்லைகளைக் கடந்து வெற்றி கண்டவர்களை நினைவில் கொள்ளுங்கள். நிம்மதி காண்பீர்கள்.

எந்தச் சோகமும் சில தினங்களுக்கு மேல் நிலைப்பதில்லை. "காதல் தோல்விகள் நினைவுகளை விட்டு அழிவதில்லையே" என்று சிலர் முணுமுணுப்பது கேட்கிறது.

ஒரு விடயமோ அல்லது அனுபவமோ தோல்வியில் முடிகிறது என்றால் கவலைப்படாதீர்கள். அதைவிட உயர்வான ஒன்று உங்களுக் காகக் காத்திருக்கிறது என்பதை உணருங்கள்.

உணர்வுகளால் மனதுக்கு வளம் கொடுங்கள். மனம் சோர்ந்து போனால் வெற்றிகளும் தோல்விகள் தான்.

சோகம் மேலும் மேலும் உங்களைச் சோதிக்கிறது என்றால் ... மனம் விட்டுப் பேசுங்கள் உங்கள் அன்புக்குரியவர்களிடம் அவர்கள் உங்களைப் பெற்றவர்களாகவோ, உற்றவர்களாகவோ, உடன் பிறப்புக் களாகவோ, நண்பர்களாகவோ, ஆசிரியர்களாகவோ இருக்கலாம்.

அழகிய உணர்வுகள் வளர்க்க ஆயிரம் வழிகள் இருக்க விழிகள் கலங்குவதேனோ? மாற்றுங்கள் உணர்வுகளையும் மகிழ்ச்சியாக மனம் திடமானால் அனைத்துமே உங்கள் வசம் தான்.

வாழ்க பல்லாண்டு.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. பலமும் பலவீனமும்

மனிதனது வாழ்க்கையை முன்னேற்றும் சக்திகள் அவனது பலமும், பலவீனமுமே. பலம் பெறும் போது வெற்றிகள் குவிக்கிறான். பலவீனமடையும் போது பாடங்கள் கற்கிறான்.

கற்றுக் கொள்ளும் பாடங்கள் இன்னொரு தடவை அவனை வீழ்ச்சியடைய விடுவதில்லை தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் பலவீனம் கூட வெற்றி தான்.

உங்களுடைய பலங்கள் எப்போதும் மனதுக்குள்ளேயே இருக்கட்டும் சேமிப்பாக தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளுங்கள். பலவீனங்களை அடுத்தவர்களிடம் காட்டிக் கொள்ளாதீர்கள். அது உங்கள் மனதுக்குள்ளேயே இருக்கட்டும். நீங்கள் வணங்கும் தெய்வத்திடம் முறையிடுங்கள். இறைசக்தி மிகவும் அற்புதமானது. அது உங்களை வாழ்விக்கும்.

மனப்பாரம் கண்கள் வழியே வெளியேறட்டும் கண்ணீராக ... கண்ணீர் மறைந்த முகம் பிரகாசம் காணும். நம்பிக்கை தரும் பலங்களையும், பலவீனங்களையும் பலப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் வெற்றிகள் உங்களிடமே ....

உலகத்திலிருந்து நீக்கப்பட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. ஒளிபெறு ...

மனம் இருள், ஒளி என்ற இரண்டும் கொண்டது.

சிந்தனை தெளிவற்று இருக்கும் போது இருளாகவும், தெளிந்த நீரோடையாகும் போது ஒளியாகவும் தோன்றுகிறது.

இருட்கடலில் இருந்து கொண்டே மனிதன் ஒளியைத் தேடினால் ஒளி கிடைப்பதில்லை. இருட்கடலை விட்டு நீந்திக் கரையேறும் போது புது ஒளி தானாகவே கண்களில் தெரியும்.

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கை ஒளிமயமாக இருக்கும் என்றெண்ணித் தான் ஆரம்பிக்கிறான். துரதிஷ்டவசமாக ஒளி மறைந்து போக வாழ்க்கை இருளடைகிறது. மனம் தடுமாறுகிறது.

"கையில் விளக்கு இருக்கும் வரை தான் ஒளியும் இருக்கும். விளக்கு தவறி விழுந்து விட்டால் இருளே தான் மிஞ்சும்." மனங்களில் இருக்கும் கோபம், அழுகை, வெறுப்பு, சந்தேகம், விரக்தி வாழ்வை இருளாக்குபவை.

மகிழ்ச்சி, அன்பு, பாசம், சிரிப்பு வாழ்கையை இனிமையாக்கி ஒளி தருபவை.

வாழ்க்கையை வாழ்ந்து பாருங்கள். ஒவ்வொரு அடியும் நீங்கள் எடுத்து வைக்கும் போது கூடவே ஒளியும் வழிகாட்டும். மனப்பயங்களை அகற்றி மகிழ்ச்சிப் பயிர்களை வளருங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. சிரித்தபடி கவலைப்படு ....!

இந்த நாள் இனிய நாள் ஆகட்டும்

மனித வாழ்க்கையில் சோகங்கள் மிகப் பெரும்பங்கு வகிக்கின்றன. சிலர் சோகங்களை அழுதபடியே சொல்வர். சிலர் சிரித்தபடியே சொல்வர். சிலர் சொல்லாமலேயே இருப்பர். சோகத்தின் காரணம் யாரென.... எதுவென நினைக்கிறீர்கள்?

காரணம் பயம், வறுமை, நோய், தோல்வி, இழப்பு, மரணம் என்று பல சொல்லாம்.

ஒவ்வொரு சோகத்திற்கும் மருந்து வார்த்தைகளில், தன்னம்பிக்கையில் உள்ளது. பயம் ஏற்படுகிறது என்றால் எதனால்?... என்ற கேள்வியைக் கேட்டுக் கொள்ளுங்கள். விடை கிடைத்ததும் தீர்வு காணுங்கள்.

வறுமை ... தீராப் பிணி அல்ல அதுமாறும் உழைப்பு எனும் மருந்தினால் நோய் கூட மருந்தில்லாமலே தியானங்களால், மனக் கட்டுப்பாடுகளால் மாற்றக்கூடிய வழிகள் கண்டறிப்பட்டுள்ளன. சுவாசப்பயிற்சி அழகிய உதாரணம்.

தோல்விகள் உங்களுக்குப் பிறரால் வருவனவல்ல. உங்களால் வருவது தோல்வியை வெற்றியாக மாற்றும் சக்தி மனதுக்கு உண்டு. மாற்றுங்கள். இறுதியாக மரணம் என்று சொல்லுங்கள் நுழைகிறேன்.

"மரணம் வாழ்வின் முடிவல்ல" ஆன்மா இன்னொரு உடல் கொண்டு உலாவ வேண்டிய தருணம் அது மரணம் கண்டு பயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை அற்றது மனித உயிர் வாழும் போது சுமந்த சுமைகளை இறக்கி விட்டு ஆனந்தமாகப் பயணிப்பது. சோகங்கள் மறக்க வாய்விட்டுச் சிரியுங்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் சிரிக்க வையுங்கள். அதுவும் முடியவில்லையாயின் அமைதியான ஒரு இடத்தில் பதினைந்து நிமிடங்கள் கண்களை மூடியபடி மிக... மிக ... அமைதியாக அமர்ந்திருங்கள். தொலைபேசிகள் தூரமாகட்டும். ஒரு மெகுதிரியின் மஞ்சள் நிற சுவாலையை மனதில் எண்ணிய படி அல்லது ஒரு மஞ்சள் நிற மலரை நினைத்தபடி இருங்கள். பதினைந்து நிமிடங்கள் கழிந்த பின்னர் கண்களைத் திறந்து பாருங்கள். அழகான உலகம் ஒளி மயமானத போலத் தோன்றும். சோகங்கள் தீர்ந்து விட்டதையும் உணர்வீர்கள். நம்புங்கள் சுகமும் துக்கமும் நமக்குள்ளே தான் மாற்றங்களும் ... நமக்குள்ளே தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. தடைகள் கடந்து சிகரம் தொடு!

மனம் வலி கண்டு, கோபம் கொண்டு அணை உடைத்துச் செல்லும் பெரு வெள்ளம் போலே ஆகும் போது தற்கொலை எண்ணங் கள் தூண்டப்படுகின்றன. வார்த்தைகள் வார்த்தைகளோடு யுத்தம் செய்து மனம் பெரும் கொலைக் களமாகும் போது வாழ்வதா? சாவதா? என்ற போராட்டம் தடுமாற வைக்கத்தான் செய்யும். உலகம் என்ற பெரிய சோலை உங்களுக்காகக் காத்திருக்க உதவாத கவலைகளை ஏன் மனது சுமக்க வேண்டும்? உதறிவிடுங்கள்! அவை தூரமாகட்டும்.

பிறப்பின் திகதி மட்டும் அறியத்தந்து அனுப்பி வைத்தான் இறைவன். மரணத்திகதியை அவன் மட்டும் அறியட்டும்.

வார்த்தைகளில் மரணத்தைத் தவழ விடாதீர்கள். இறந்து போவது நீங்களானாலும் ஒட்டு மொத்தக் குடும்பமும் உருக்குலைந்து போகும் என்பதை மறக்காதீர்கள்.

உங்கள் சாதனைகளுக்காக எத்தனையோ விடயங்கள் காத்திருக்கின்றன. கவலைகளை விடுத்து அடியெடுத்து வையுங்கள் முன்னேற்றம் எனும் சிகரம் நோக்கி, வலிகள் கடந்து வழிகளைத் தேடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. தொலைக்காதே தேடு ....

தொலைத்தவன் தேடுவான்...
நிம்மதியை
பொருளை
வாழ்க்கையை
மகிழ்ச்சியை
அழகை
உறவை
உணர்வை
உலகத்தை
தொலைந்தது மனமானால்
மாற்றத்தை மருந்தாக்கு
தொலைந்தது கல்வியானால்
அறிவை வரமாக்கு.
தொலைந்தது வாழ்க்கையானால்
அன்பை வரவாக்கு.
தொலைந்தது மகிழ்ச்சியானால்
சிரிப்பைக் (கொடையாக்கு) மலராக்கு.
தொலைந்தது நீயானால்
இறைவனிடம் அடிமையாகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. விடையும் வினாவும் நாமாகி ....

கேட்க முடியாத கேள்விகளும்
சொல்ல முடியாத பதில்களும்
காலத்தின் நன்மை கருதியே
மௌனம் கொண்டால்
கேள்விகள் கேட்கப்படாதிருத்தலும்
பதில் சொல்லப்படாதிருத்தலும்
சரியானவையே!

வினாக்கள்
விடைகாணும் வேளை வரும்போது
விடைகளுக்குள் இத்தனை ஆச்சரியங்களா? என்று
வினாக்களே அதிசயிக்கும்!

மனித வாழ்க்கையும் இதே போலத்தான்
குழப்பங்களும் விளைவுகளும்
நன்மை கருதி
அமைதியாகும் போது
கிடைப்பது அதிசயங்களும்
ஆச்சரியங்களும் தான்!

காலம் முன்வைக்கும் கேள்விகளுக்கு
காத்திருப்பும் பொறுமையுமே
விடைகளாகும் போது
நல்ல அனுபவங்கள் தந்து
வாழ்க்கை அர்த்தம் பெறுகிறது
வணங்கப் படுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31. விநாடிகளுக்கு சில வினாக்கள்!

விநாடிகளுக்கு சில வினாக்கள்
வைக்கிறேன்!
விடைகளும் நானே தருகிறேன்!
பிறப்பு ஓரிடம்
வாழ்வு வேறிடம்
முடிவு விதியிடம்
ஏன்?

பிறப்பு உன் புண்ணியம்
வாழ்வு உன் வினைப்பயன்
முடிவு....
இறைவனிடம்!

வெவ்வேறு தோட்டங்களில்
வெவ்வேறு மலர்கள்
பல்வேறு நிறங்களில்
மலர்கள் ஏன்?

எத்தனை தோட்டங்களில்
எத்தனை சோலைகளில்
எத்தனை மலர்கள் மலர்ந்தாலும்
சேருமிடம் என்னவோ
தெய்வ சந்நிதானம் தான்!

எங்கோ பிறந்து
எங்கோர் வாழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகிவிடுகின்றன இதயங்கள்....
எப்படிச் சாத்தியம்?
இன்னார்க்கு இன்னார் என்று
இறைவன் எழுதிய தீர்ப்பு,
பூர்வ ஜென்மம்
புனிதப் பயணம்!

காதலில் தோல்விகளும்
வெற்றிகளும் ஏன்?
எதற்கு?
என் இறுதி வினா
இது என்றேன் இறைவனிடம்

காதல் தோற்றுப் போவது
எனக்கு உடன்படில்லை
அதனால்
காதலிடம் நான்
தோற்றுப் போகிறேன்
என்று சிரித்து மழுப்பினான்
இறைவனும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. **மனதோடு பேசு ....!**

மனமே நலமா? என்று
மகிழ்வோடு
கேட்டுப் பார்
தினமும்!
மனம், இல்லையென்றே
பதில் சொல்லும்!

ஓயாத துன்பங்கள்
தீராத கவலைகள்
எப்படி நலம் வரும்?

முணுமுணுப்புகள்
பதில்களாகின்றன!

மனம் மரத்துப் போய்விட்டது
என்று வெறுப்பான பதில் வரும் போது
சாட்டை கொண்டு, உன்னையே அடித்துக் கொள்!
மரத்துப் போவது மனமல்ல - உன்
உணர்வுகள் தான் என்று.

அழகிய உணர்வுகள்
ஆண்டவன் தந்தான்
இனிமையாக வாழச் சொல்லி
நீயோ ...
இதயத்தை மூடி வைத்துவிட்டு
இதமான காற்றைத் தூரத்தே நிறுத்திவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாசிக்க முடியவில்லையே...
என்று தடுமாறுகிறாய்.

விழித்துப் பார்...
அழகிய உலகம் உனக்காகக் காத்திருக்கு
மன இறுக்கம் களைந்து விடு
அழகிய பறவை நீஆகு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 33. வாழ்க்கை என்பதென்ன?

வாழ்க்கை என்பதென்ன?
ஒரு கனவு உயிர் பெற்று
உலக வலம் வருதல்.

உயிர் உழன்று சுழன்று
படகென ஆகி கடலினில் மூழ்கி
அமைதி கண்ட புயலென ஆகுதல் (வாழ்க்கை)

அழுவதும் பின் தெளிவதும்
தோற்பதும் பின் வெல்வதும்
துணிவதும் தொடர்வதுமான பயணம் (வாழ்க்கை)

ஒரு விரல் உலகம் காட்டிட
மறுவிரல் தன்னையே காட்டிட
எது பிழை? சரி எது?
உணர்ந்திடத் தெரிந்திடாக்
குழந்தை போன்றது .... (வாழ்க்கை)

தடைகளைத் தாண்டி
படிதனில் ஏறி
விழ விழ எழுவதும்
அழ அழத் தொழுவதும்
பின்
இறைவனே கதியென
அடைக்கல மாதல் ...

வாழ்க்கை என்பதிது தான் ...
அனுபவப் பாடமாகும்
அதுவே வேதமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. கண் மழை

கண்கள்
என்ற தேசம்
பொழியும் மழையால்
மனப்பயிர் செழிக்கும்.
அதனால்
அழுதுவிடு
தெளிந்த வானம் பார்
புரிந்து விடும்.

மன இறுக்கமோ
மகிழ்ச்சிப் பெருக்கமோ
அழுகை ஒன்றே
உன் நண்பனாகும்.
இதைத் தலையணை சொல்லும்
கேட்டுப்பார்.

அழுகையின் தீர்ப்பு
மகிழ்ச்சி என்று
மழலைக்கும் தெரியும்.
தாயாகி..... மழலையாகி
மனதிடம் நீயே பேசு.

உன்னோடு உரையாடும் தருணங்களை
மனம் போற்றும்.
அங்கே மனச்சாட்சி பேசும்.
அழுகை மறந்து போகும்.
நீயும் அழகாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. காலமும் கோலமும் ...

வாழ்க்கை தந்த
அழகான நாட்களை
வாழாமல் வாழ்ந்து விட்டு
முதுமைக் கோலத்திற்குள்
தேடல் என்ன செய்கிறாய்?

ஏ ... மானிடா !
கொஞ்சம் திரும்பிப் பார்
நீ கடந்து வந்த
உன் வாழ்க்கைப் பாதையை.

பொருள் தேட
புதையல் தேட என்று
உன்னை நீயே தொலைத்தபடி
ஓடுகிறாய்.
நீயே புதையல்.
உன் இளமையே வரம்
இதை மறந்துவிடாதே.

முதுமைப் பருவத்தில்
ஒரு நாற்காலி
உன் சொந்தமாகும்.
புதையல் உன் மனைவி மட்டுமே – அவள்
வளர்த்த நாய்க்குட்டி போலே
உன் முகத்தையே பார்த்து நிற்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பொன் கொடுத்து
பொருள் கொடுத்து வளர்த்த உறவுகள்
உன் ஆரோக்கியம் உயர்நிலையில்
இருக்கும் மட்டுமே.
உன்னிடம் இருந்து
பலன் இல்லையெனக் கண்டால்
கழன்று விடும் உண்ணிகள் தான்
பார்த்துக் கொள்.

உன் உதிரம் கூட நீ தருவேன் என்றால்
ஓடித் தான் வரும் உறவுகள்.
உன் கண்ணீருக்குள் நீயே
தொலைந்து இறந்து போனாலும்
நாதியற்றுத் தான் இருப்பாய்.
உன்னைத் தாங்க உறவுகள்
உடனே வரப் போவதில்லை.

முடிவாகச் சொல்கிறேன் மானிடா
உன்னை நீ பாதுகாத்துக் கொள்.
உன் வயது உன்னைக் கடந்து செல்லமுன்
உன் நடை தளர்ந்து போகமுன்.
உன் புன்னகையை
நீ அனுபவி.
உனக்கென்ற பொழுதுகளை நீ உருவாக்கு.

வாழ்க்கை தந்த அழகிய நாட்களை
இன்றே வாழ்ந்துபார்
முதுமைக் காலத்தில்
அதுவே உனக்கு
மீட்டும் நினைவுகள் தரும்!
ஆறுதல் வார்த்தைகள் தரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. அழகிய சந்தர்ப்பம்

வாழ்க்கை
ஒரு அழகிய சந்தர்ப்பம்
வாழ்ந்து பார் .... கொஞ்சம்
வசந்தங்களையும் சுமந்தபடி!

அழகான உலகம் இறைவன் படைத்தது
தனக்காகவல்ல
உனக்காகவே.

சோம்பலை மறுத்து
வெளியே நடந்து வா
கால்கள் இல்லாதவன்,
பார்வை இழந்தவன்,
செவிப்புலனற்றவன்,
வீதியில் வியாபாரம் செய்கிறான்,
வாழத் துடிக்கிறான்.

அழுது விடியும் உன் பொழுதுகளை
மகிழ்ச்சிப் பறவையாக்கு
மனது உயரே ... உயரே பறந்து போகட்டும்
அழகுமலர் நீயாவாய்.

துன்பம், நோய், இழப்பு கண்ணீர்
வறுமை என்று வாழ்வின் ஒரு பக்கத்தையே
படிக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி, வெற்றி இன்பம், உற்சாகம்,
என்று மறுபக்கத்தையும் தேடிப்பார்

வாழ்க்கை ஒரு அழகிய சந்தர்ப்பம்
அழுகையை மறந்து வாழ்ந்து பார்
புரிந்து கொள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. எல்லாம் உன்னிடமே!

மொழியை விழிக்குள் வைத்து
அழகை ரசித்துப் பார்...
அழகான கண்கள்
உன்னிடம் இருந்தால்!

விழியை மொழிக்குள் வைத்து
தமிழைச் சுவைத்துப் பார்.
அழகான இதயம்
உன்னிடம் இருந்தால்!

வழியைத் தூரம் வைத்து
மொழியை அருகில் வைத்துப்பார்
வளமான கற்பனை உன்னிடம் இருந்தால்!

கடமைகள் பக்கம் வைத்து
அலையைத் தூரம் வைத்துப் பார்
காதல் மனம் உன்னிடம் இருந்தால்!

கடமைகள் பக்கம் வைத்து
காதலைத் தூரம் வைத்துப் பார்
கண்ணீர் உன்னிடம் இருந்தால்!

ஜனனம் அருகே வைத்து
மரணம் தொலைவில் வைத்துப்பார்
மௌனம் உன்னிடம் இருந்தால்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. உன்னை நீயே எழுது ...

உன் கண்ணீர்த் துளிகள்
குளமாக வேண்டாம்
சமுத்திரமாகட்டும்.
ஒவ்வொரு துளிகளும்
உன் வேதனைகளின் சாதனை!

சோகம் உன்னைச் சோதிக்கும் போது
சிரித்தபடி வணக்கம் சொல்
அது வந்தவழி சென்றுவிடும்
பதில் வணக்கம் சொல்லியபடி

அழுகை உன் விதியென்று
அவதிப்படாதே...
கண்ணீர் கடந்த இதயம்
மிகவும் அழகானது .... தெளிவானது.
மழைமேகத்தையும் வானத்தையும் எண்ணிப்பார்
புரிந்துவிடும்.

உன் எண்ணங்களை ஆளப்பழகிக் கொள்.
அது உன் வாழ்நாட்களை வசந்தமாக்கும்.
எழுத்துக்களை உன் விழிகளுக்குள் நிரப்பிவை
அது உன்னைக் கொண்டு உன் விதியினை எழுதவைக்கும்.

உன்னை நீயே எழுதும் போது
உலகம் உன்னைத் திரும்பிப் பார்க்கும்
உனக்குள் நீயே உலகம் காண்பாய்!
அப்போது கண்ணீர்த் துளிகள்
நீ தேடியும் காணமாட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. முடிவல்ல .... ஆரம்பம்

ஒன்றின் முடிவில்
இன்னொன்று ஆரம்பம்
இது
இயற்கையின் நியதி.
இறைவனின் தீர்ப்பு.

வாழ்க்கை முடிகிறது
என எண்ணி வாழ்பவர் வாழ்வினிலே
புதிய உறவுகளின் வருகையாலே
வசந்தமும் வீசி நிற்கும்
வாழ்க்கையும் தொடர்ந்து செல்லும்.

ஜனனம் எழுதும் முடிவுரை
மரணமாகிட
மரணம் எழுதும் கவிதை
ஜனனமாகிறது.

அழுவதும் சிரிப்பதும்
வெல்வதும் தோற்பதும்
வாழ்க்கைத் தேடலின்
தொடர் பயணம்.
விதி எழுதும் வரிகளை
பணிவுடன் வாசித்தபடியே
பயணிக்கிறவன்
வெல்வான் .... வாழ்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவு என்பது
எப்போதோ எழுதப்பட்ட தீர்ப்பு.
அதன் முடிவைத் தேடிக்
களைத்துப் போகிறான் மனிதன்.
வாழ்கின்ற காலங்களை
வாழ்கின்ற போது
வாழ்ந்து வளமாக்குங்கள்
அது வாழ்வின் தொடக்கமாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. **அழகிய மங்கை ....**

ஆழக்கடல் மனம்
பெண்ணுக்கென்று
எழுதி வைத்தார் உரையினிலே
உண்மை ...
ஆழமான சிந்தனைகளில் இருந்து
அவள் அன்பு மழையாய்ப் பொழிகிறது
தாய்மை என்ற பெயராலே.

மறைபொருளாய் இருக்கும் இவள் மனம்
என்றே மண்ணிலுள்ளோர் சொன்னாலும்
தன் துன்பங்கள் மறைத்தே பேதமற்று
வேதமாவாள்.
அதனால் இவள் மங்காப் புகழ் கொண்ட
மங்கை.

இடிப்பாள் உரலை
இடித்துரைப்பாள் பிழைகளை
ஊட்டி வளர்ப்பாள் தமிழை ...
உணவுடன் .... உணர்வுடன்
அதனால் இவள் பாட்டி
நான் பேத்தி!

புல்லாகிப் பூடாகி
சருகாகிப் போகாமல்
புகழாகி, வெற்றியாகி
ஒளியாகி பெருமையாவாள்
பெண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. உறவு சொல் ...

அன்பின் எதிர்பார்ப்பு
உறவு எனும் உரிமைதான்.
பாசம் என்றும்
நேசம் என்றும்
பலப்பல பெயர் கொண்டே
வாழ வைக்கும்.
வாழ்த்தி நிற்கும்.
வணங்க வைக்கும்.
வணங்கி நிற்கும்.

உறவுக்கு உலகம் தந்தே
உயிர்கள் வாழ்ந்திருந்தால்
மனங்களுக்கு வலியேது?
குணங்களுக்குக் குறைவேது?
மாற்றங்கள் மனதிலும் தான்
மறுபதிப்பாக வேண்டும் என்பேன்.

உயிரை மதித்துப் பார்
உறவுகள் பலப்படும்.
உறவுகளை மதித்துப்பார்
உயர்வுகள் தேடிவரும்
புது உலகம் உனதாகும்
பொறுமையினால் அன்பு செய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. நாட்குறிப்பின் புன்னகைப் பக்கங்களில் இருந்து ...

அந்தி சாயும் நேரம்
அழகிய நதியோரம்
இதமான தென்றல் மெலிதாக வீசிட...
உன்னை நினைத்தபடியே உலாவிக் கொண்டிருந்தேன்.
வார்த்தைகள் வந்து வந்து கேட்டன
"வண்ணக் கவிதை சொல்" என்றே
எண்ணங்களால் மணலில் கோலங்கள்
போட்டேன் அழகான உன்பெயர்
அங்கு அழகு நிலவானது.
அள்ளி எடுக்க ஆசைகொண்டு அருகே
சென்றேன்...
அலை வந்து உன் பெயரைத்
தனக்கென்று சொன்னது.
அழுதேன் சில நிமிடங்கள்
"அழாதே இங்கிருந்து"
கடல் என்னை அதட்டியது.
"கடல் என்று பெயர் தந்து என்னைக்
கண்ணீரால் நிரப்பி விட்டால்
என் நிலமை என்ன சொல்?
சோலைக்குள் போய் அழு"
என்று விரட்டியது.
சாலைகள் பல கடந்து சோலைக்குள் வந்த போது
புன்னகையால் எனை வரவேற்றன மலர்கள்.
ஒவ்வொரு சிரிப்பிலும் இறைவனைக்
கண்டு மகிழ்ந்தேன், நானும் சிரித்தேன்
மலர்களும் சிரித்தன.
மலர்களோடு நேசம் கொள்ளுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. ## ஆசையே அலைபோலே....

முடிவில்லாத வானம் போலே
ஆசைகளும், கற்பனைகளும்.
அணைகடந்த வெள்ளம்போலே
மகிழ்ச்சி வேண்டி
மனசு கெஞ்சும்.
அணை உடைந்து போனால்
கண்ணீர் வற்றும்.

மறுபடி மறுபடி, மழைவேண்டிய கொக்குபோலே
மனசு காத்திருக்கும்
“இப்படி நடந்தா லென்ன?
அப்படி நடந்தா லென்ன?”
கேள்விகளைக் கணைகளாக்கி
மனசு, அலைபாயும்
பின் அலையாகும் கடலாகும்.

ஆசைப்பட ஆசைப்பட
ஆசைகளும் உன்மேல் ஆசைப்படும்.
ஓசையிட்டும் மௌனமாகவும்
வானம் கொஞ்சம் கேட்டிடுமோ?
வண்ணமழையைத் தந்திடுமோ?
ஆசையாகத் தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. தொடரும் தொடர்....

கவலைப் படாதே
கூட வருகிறான்
கடவுள், உன்னோடு.
காத்து நிற்கிறான்
கருணை விழிகளோடு.

வறுமை வாழ்க்கை என்று
எண்ணி விடாதே
பொக்கிசம் அவன் என்று
போற்றிப் பாடு
இயற்கையும் இயங்கும்
அவன் பெயரால்
உன்னையும் இயக்குவான்.

உணர்ந்து கொள் இறைவன்
உனக்குள் என்றும்
உயிராய் உறைகிறான் என்றும்.
மனதில் அவனை நினைத்து விடு.
உன் வழிகளை ... வலிகளை
அவனிடம் கொடு.
விழிநீரால் கொஞ்சம் அபிஷேகம் செய்...
வினைப்பயன் தீர்த்து
பயன் தருவான்.

பாதைகள் வகுத்தவன் இறைவன்
பயணம் செய்பவன் நீ
இலட்சியம் சரி எனில்
வெற்றியும் இமயம் வரை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. ## இதயமே

இதயம்!
இறைவன் நினைவுகள்
சுமக்கத் தந்த பொக்கிஷம்
அதை எல்லோருக்கும்
கொடுக்க முடியாது.
இனிமைகள் மட்டும் சுமக்கட்டும்
வலிகள் வேண்டாமே
வசந்தம் மட்டும் காணட்டும்
வறுமை வேண்டாமே ...

46. ## எழுத விரும்பினேன்

தொடர் கதையாக இருங்கள்
அன்பிலே ... பண்பிலே ...
சிரிப்பிலே .... நட்பிலே ....
குணத்திலே .... இரக்கத்திலே ....
கருணையிலே .... வெற்றியிலே ....

அணிந்துரையாக இருங்கள் ....
கல்வியிலே .... நீதியிலே ....
நேர்மையிலே .... பதவியிலே ...
புகழிலே .... பிரிவிலே ...
தோல்வியிலே ...

முடிவுரையாக இருங்கள் ....
கோபத்திலே ... வெறுப்பிலே ...
அழுகையிலே .... துக்கத்திலே ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. ## தேடல் ....!

வாழ்க்கை துன்பம் என்றும்
வாழத் தெரியவில்லை என்றும்
வருந்திக் கொண்டே வாழ்பவன்
தன்னை வருத்திக் கொண்டே வாழ்பவன்
பூமிக்கு அவன் பாரம்!

பூமி அவன் கண்களுக்கு
வெறும் புள்ளியாகத்தான் தெரியும்
அதனால் பூமி முற்றுப்புள்ளி
வைக்கிறது அவனுக்கு!

தேம்பிக் கிடப்பவன்
தூங்கிப் போகிறான்
தானாக விழித்துக் கொண்டால்
மட்டுமே வெற்றி வெறுவான்!

தேடலில் நிறைவது தான் வாழ்க்கை
தேடல் தேவையென்று
செயலில் இறங்குபவன்
தேடிக் கொண்டே இருக்கிறான்.
தோண்டி எடுக்கிறான்.
பொக்கிஷங்களை, புதையல்களை.
பூமியும் தன்னை அறிபவனைப்
போற்றுவதில் ஆனந்தமடைகிறது.
தேடல் உள்ளவனுக்கு புள்ளி
நெற்றிப் பொட்டாகிறது ....
வாழ்வின் முடிவு வரை
தேடல் ஒரு
பயணம் ஆகிறது
வெற்றியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. **கருணையின் மொழியாகு**

பயம் உன் மனதை இருளாக்கும்.
தைரியம் உன் முகத்தை அழகாக்கும்.
தன்னம்பிக்கை உன்னை ஒளியாக்கும்.

உன் பிழைகளை நீயே எழுது....
அழகிய வடிவம் நீ பெறுவாய்.
உன் குறைகளை நீயே சீர் செய்.
குவலயம் உன்னை நிமிர்ந்து பார்க்கும்.

வாழ்க்கை நீண்ட பயணம்
நம்பிக்கை உன் கால்களின் அணிகலமாகட்டும்.
நல்வாக்கு உன் நாவினில்
இனிமைக் கனியாகட்டும்.

முயற்சிப் பயிர் வளர்த்து
முன்னேற்றம் எனும் தோட்டம் செய்.
அறுவடை தரும் அமோக விளைச்சல்
உன்னை நீயே வியந்து பார்ப்பாய்!

தடைகள் மலைகள் என்று
மலைத்து நிற்காதே.
உன் பேச்சும் மூச்சும்
அழகிய தமிழானால்
தடைகள் பொடியாகும்.
தரணியும் உன்புகழ்பாடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகு .... ஆகு ... இனிய மொழியாகு
விடைகள் அறிய
வினாக்களை உனக்குள்ளே தேடு
கேள்வியும் பதிலும் நீயே என்றாகும் போது
கடவுளும் வியக்கும்
கருணையின் மொழியாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மலர் தூவி...

இந்நூலின் வரவுக்காய்

பணியாற்றிய

ஊடகத்துறையினருக்கும்

இலக்கிய உறவுகளுக்கும்

எழுத்துலகில் என்னை

ஏற்றிக்கொண்டிருக்கும்

எல்லா ஏணிகளுக்கும்

அலை நடுவில்

தோணியாகக் கரையேற்றும்

நண்பர்களுக்கும்


உவகை கொள்ளும்

உறவினர்களுக்கும்

என்

மனம் மகிழ்ந்த நன்றிகள்.

யாழ்.தமிழ்மகள்
மணிமேகலை கைலைவாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்திலிருந்து நீக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் திறக்கும் போது
புரட்டுகின்ற பக்கங்களில் இருந்து
வாசக நெஞ்சங்களில்
வந்து சேரட்டும்
புதிய ஒளிக் கீற்றுக்கள்!

சாதனைப் பெண்ணாம் – என்
சகோதரிக்கு வாழ்த்துக்கள்

வயவையூர் கை.சீதாராமன்.



pbd
618100089 R.S. 200.00
INDHA NAAL INIYA NAAL
07/05/2015

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Print By:-Mathicolours, Muthiraichanthai 021 222 9285